# கூடலூர் நகராட்சி (நீலகிரி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொரோனா தடுப்பு பணிகள் தொடர்பான காணொலிக்காட்சி ஆய்வுக் கூட்டம் நடை பெற்றதில் வழங்கப்பட்ட அறிவுரைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் விபரம்

| வ.எண் | மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட அறிவுரைகள் | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1) | அம்மா உணவகத்தில் பயனாளிகளுக்கு தரமான சுகாதாரமான, சுவையான உணவு தயார் செய்து மூன்று நேரங்களுக்கும் தேவைக்கேற்ப தயார் செய்யவும், அந்தந்த நகர் பகுதிகளுக்கு தேவைப்படும் கலவை சாதனங்களை தயார் செய்து வழங்க வேண்டும். அம்மா உணவக கண்காணிப்பு அலுவலர் மேற்காணும் பணிகளுக்கு தேவையான மூலப்பொருட்கள் இருப்பு மற்றும் உணவு தயார் செய்து மக்களுக்கு வழங்குதல் ஆகிய பணிகளை நாள்தோறும் கண்காணித்து அறிக்கை செய்யப்பட வேண்டும். | கூடலூர் நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகம் தினசரி மூன்று வேலையும் இயங்கி வருகிறது. அம்மா உணவகத்தில் தினசரி காலை இட்லியும் மதியம் கலவை சாதம் தயார் செய்து சுகாதாரமான முறையில் வழங்கப்படுகிறது. அம்மா உணவத்தில் தேவையான பொருட்கள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இப்பணியினை பார்வையிட கண்காணிப்பு அலுவலராக சுகாதார ஆய்வாளர் நியமிக்கப்பட்டு உணவு தயார் செய்து மக்களுக்கு வழங்குதல் மற்றும் இருப்பு பொருட்களை சரி பார்த்தல் ஆகிய பணிகளை நாள்தோறும் கண்காணித்து அறிக்கை அளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 2) | ஒவ்வொரு நகராட்சிக்குட்பட்ட சாலையோர வியாபாரிகளுக்கு உதவித்தொகை வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சியின் மூலம் உரிய பயனாளிகளுக்கு நாளை மாலைக்குள் அவரவர் வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும். இதில் எவ்வித சுணக்கமும் காட்டக்கூடாது. தவறும் பட்சத்தில் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட 45 சாலையோர வியாபாரிகளில் 30 பேருக்கு தொகை வங்கிக் கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 15 நபர்கள் வங்கி கணக்கு தகவல் சேகரிப்பட்டு விரைவில் தொகை வழங்கப்படும். |
| 3) | தினசரி சந்தை மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் சமுதாய இடைவெளி கடைபிடிக்கப்படுதல் வேண்டும். பொது இடங்களில் பெரிய அளவிலான நச்சுத்தெளிப்பான் இயந்திரத்தினை பயன்படுத்தி கிருமிநாசினி தெளிக்கப்பட வேண்டும். | உழவர் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் சமுதாய இடைவெளி கடைபிடிக்கப்பட வேண்டும் என வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு ஒலிப்பான்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டு வருகிறது. மேலும் தினசரி சந்தைக்குள் வருகை தரும் பொதுமக்கள் கிருமி நாசினி மூலம் கைகளை சுத்தமாக கழுவிய பின்னர் அனுமதிக்கப்படுகின்றன.<br>சுத்தீகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பொது இடங்களில் உயர் அழுத்த நச்சுதெளிப்பான் இயந்திரத்தினை பயன்படுத்தி இருமுறை கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வருகிறது. |

| | | |
|---|---|---|
| 4) | அனைத்து அரசு மருத்துவமனை மற்றும் பொது சுகாதார நிறுவனங்களுக்கு கொரோனா 19 தடுப்பு நடவடிக்கையாக தினசரி ஐந்து முறை நச்சுக்கொல்லி தெளிப்பான் தெளிக்கப்பட வேண்டும். அதனை தனி கவனம் செலுத்தி கண்காணிக்கப்பட வேண்டும். | கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு பணியாளர் அமர்த்தப்பட்டு தினசரி ஐந்து முறை நச்சுக்கொல்லி தெளிப்பான் தெளிக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளை துப்புரவு ஆய்வாளர் மூலம் தனி கவனம் செலுத்தி கண்காணிக்கப்பட்டு வருகிறது. |
| 5) | அனைத்து தடுப்பு பணி சாதனங்களும் இருப்பில் வைத்திருத்தல் மற்றும் தடுப்பு பணி சாதனங்களை சுகாதாரமான முறையில் பேணப்பட வேண்டும். | அனைத்து தடுப்பு பணி சாதனங்களும் கிருமி நாசினி மருந்துகளும் பாதுகாப்பான இடங்களில் சுகாதாரமான முறையில் இருப்பு வைத்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. முகக் கவசங்கள் , கையுறை மற்றும் PPE கொள்முதல் செய்ய விரிவான நடவடிக்கை சுகாதார ஆய்வாளர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| 6) | தனிமைப்படுத்தப்பட்ட இல்லங்களில் சுகாதாரத்துறை வழிகாட்டுதலின்படி திடக்கழிவுகள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். | தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் சுகாதார துறையினரால் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி தனிமைப்படுத்தப்பட்ட இல்லங்களில் இப்பணிக்கென பிரத்தியேகமான பணியாளர்கள் மூலம் கழிவுகளை அப்புறப்படுத்தப்பட்டு எரியூட்டப்பட்டு வருகிறது. |
| 7) | அனைத்து துாய்மைப்பணியாளர்கள் மற்றும் கொரோனா நோய் தடுப்பு பணியில் ஈடுபடுத்துப்படுவோருக்கு தடுப்பு சாதனங்கள் வழங்கப்படுதல் வேண்டும். | கொரோனா நோய் தடுப்பு பணியில் ஈடுபடுத்தப்படும் அனைத்து துாய்மை பணியாளர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் உரிய தடுப்பு சாதனங்கள் வழங்கப்பட்டு அவர்களது பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது |

ஆணையாளர்
கூடலூர் நகராட்சி (நீலகிரி)